**கவனிக்க.**-2020.09.18 ஆந் திகதிய 2193/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.
**கவனிக்க.**-2020.09.18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2195 - 2020 සැප්තැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2020.09.25

*2195 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1234* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2149* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1231-B 82061-5,403 (2020/ 09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுவது சேவையாற்றும்படி கேட்கப்படலும்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையைப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலும். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

*கலாசார அலுவல்கள் திணைக்களம்*

**அரச நடனக் குழுவின் நடனக் கலைஞர் பதவியின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல்**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அரச நடனக் குழுவில் வெற்றிடங்களின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் தகுதிகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவினையுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2020.10.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நடனக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்)" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். இந்த அறிவித்தலை www.culturaldept.gov.lk என்ற வலைத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

01. **பணியில் ஈடுபடுத்தச் செய்தல் மற்றும் பணி நிபந்தனைகள்:**

I. ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன் 03 வருட ஒப்பந்த காலத்தின் பொருட்டு நியமிக்கப்படுவர்.
II. சம்பளம் : ரூபா 33,600.00 இற்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

02. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள் :**
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தோற்றி இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் நடன பாடம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் நடன டிப்ளோமா பாடநெறியை கற்று சித்தியடைந் திருத்தல்

அல்லது

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நடன பாடம் தொடர்பில் டிப்ளோமா பாடநெறியை கற்று சித்தியடைந் திருத்தல்

அல்லது

தேசிய நடன பூர்வாங்க பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

II. **தொழிற் தகைமைகள்.**- உரித்துடையதல்ல
(தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் தொழில்சார் தகுதிகள் மேலதிக தகைமை ஒன்றாகக் கருதப்படும்.)

III. **அனுபவம் :**
அரசாங்கத்தினால் அங்கீகரித்த கலை நிறுவனம் ஒன்றில் அல்லது அதற்கு இணையான நிலையம் ஒன்றில் நடனக் கலைஞர் ஒருவராக 03 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்

அல்லது

பரம்பரை ரீதியான நடனக் கலைஞர் ஒருவராக இருத்தல் (எழுத்து மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

IV. **உடற் தகைமைகள்:**
i. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலாயினும் பணியாற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உளரீதியான பொருத்தப்பாட்டு மனநிலையினைக் கொண்டதாக இருத்தல்

ii. 5 அடி 2 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. **ஏனைய தகைமைகள் :**
i. சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த குண ஒழுக்கத்தினையும் சிறந்த உடல் பொருத்தப்பாட்டினையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

ii. பதவியில் ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டான தகுதிகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பப் படிவத்தினை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் அத் தகுதிகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iii. நடன/வாத்தியம் சகல பிரிவுகளிலும் தேர்ச்சியடைந்துள்ளமை கவனத்திற் கொள்ளப்படும்.

03. **வயதெல்லை** : விண்ணப்பப் படிவத்தினைப் பொறுப்பேற்கும் திகதியில் 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 25 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

04. **ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை :**

- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையினதும் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைப் படிமுறைக்கேற்ப தற்போதுள்ள வெற்றிட எண்ணிக்கையினை விட இரு மடங்கு ஆட்கள் தொழில் சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில் சார் பரீட்சைகளிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமைப் படிமுறைக்கேற்ப பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

*தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை*

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | உரித்துடையதல்ல |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவங்கள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) | 35 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>i. பிரபல கலைஞர்களின் கீழ் தேசியமட்ட படைப்புக்களில் கலந்துகொண்டிருத்தல்<br>ii. கலாசார நிலையங்கள் ஊடாகவோ அல்லது பிரபல கலைஞர்கள் ஊடா கவோ வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருத்தல் | 25 | |
| 4. மொழித் தேர்ச்சி | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சைகளில் காட்டும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

*தொழில்சார் பரீட்சை*

| புள்ளி வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளி அளவு | தேறுவதற்கான புள்ளி அளவு |
|---|---|---|
| 1. கலைத் திறமைகள் | 30 | 15 |
| 2. தாள ஞானமும் ராக பாவமும் | 20 | 10 |
| 3. தோற்றம் (உயரம்/பருமன்) | 20 | 10 |
| 4. விசேட திறமைகள் | 20 | 10 |
| 5. கோட்பாட்டு ரீதியான அறிவு | 10 | 05 |
| மொத்தம் | 100 | 50 |

05. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்.**- விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்யும் போது கல்வி மற்றும் பிற தகைமைகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்த வேண்டியதுடன் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவது சகலவிதத்திலும் முழுமையான விண்ணப்பபடிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமேயாகும்.

நேர்முகப் பரீட்சையின் சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளுடன் முறையான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தனது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாளஅட்டை
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

06. பதவியினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏதேனும் ஒருவிதத்தில் வற்புறுத்தல்களை மேற்கொள்வது பதவியின் பொருட்டான தகுதியற்ற நிலை ஒன்றாக அமையும்.

07. விண்ணப்பபடிவத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு விடயம் தவறானது என ஒருவர் தெரிவு செய்யப்பட முன்னர் தெரிந்து கொள்ளப்பட்டால் தகுதியற்றவர் என பெயரிடவும், நியமனம் செய்ததன் பின்னர் அவ்வாறு வெளிக்கொணரப்பட்டால் பதவியிலிருந்து விலக்கவும் காரணமாக அது அமையும்.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை, அல்லது இசைவின்மை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக் கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தரணி அனோஜா கமகே,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
08 ஆம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலகப் பாவனையின் பொருட்டு

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நடனக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவியின் பொருட்டு விண்ணப்பித்தல்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :
02. முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :
03. பிறந்த திகதி :
04. வயது (2020.10.09 ஆந் திகதியில்) :
05. உயரம் : .......அடி ..........அங்குலம்
06. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
07. பால் நிலை : (ஆண்/பெண்)
08. முகவரி :
09. தொலைபேசி இலக்கம் :
10. கல்வித் தகைமை :

i. க.பொ.த. (சா./த.)

ஆண்டு:.............................. பரீட்சைச் சுட்டெண்:.......................................

| பாடம் | பெற்ற சித்தி | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

ii. தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடாத்தப்படும் நடன டிப்ளோமா பாடநெறி/ அரசினால் அங்கீகரிக்கப்படுகின்ற நடன பாடம் தொடர்பில் டிப்ளோமா பாடநெறி/தேசிய நடன பூர்வாங்க பரீட்சை

| செல்லுபடியாகும் திகதி | சித்தியடைந்த பரீட்சை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழிற் தகைமைகள் :

12. அனுபவம் :

இந்த விண்ணப்பபடிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் நான் அறிந்த வரையில் உண்மையானவையும் சரியானவையும் எனவும் இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பிழையானவை என தெரிவு செய்வதற்கு முன்னர் தெரியவந்தால் தகுதியற்றவன் ஆவேன் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் அது தொடர்பில் வெளிகாட்டப்பட்டால் நியமனம் செல்லுபடியற்றதாகும் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி :.................. ...........................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

09-803/1

---

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

கலாசார அலுவல்கள் திணைக்களம்

### அரச இசைக் குழுவின் இசைக் கலைஞர் பதவியின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அரச இசைக் குழுவில் வெற்றிடங்களின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகுதிகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவினையுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2020.10.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "இசைக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்)" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். இந்த அறிவித்தலை www.culturaldept.gov.lk இணையதளத்தில் பார்வையிடலாம்.

01. **பணியில் ஈடுபடுத்தச் செய்தல் மற்றும் பணி நிபந்தனைகள்:**

I. ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன் 03 வருட ஒப்பந்த காலத்தின் பொருட்டு நியமிக்கப்படும்;
II. சம்பளம் : ரூ. 33,600.00 இற்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

02. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சங்கீத பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

தேசிய சங்கீத இடை நிலை தரம் அல்லது இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பாத்கண்டே கல்லூரியில் சங்கீதத்திற்கான விசாரத பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற சங்கீத பாடம் தொடர்பில் பட்டத்தினை பெற்றிருத்தல்

II. **தொழிற் தகைமைகள்:** உரித்துடையதல்ல
(தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் தொழில்சார் தகுதிகள் மேலதிக தகைமை ஒன்றாகக் கருதப்படும்)

III. **அனுபவம்:**
அரசாங்கத்தின் அங்கீகரித்த கலை நிறுவனம் ஒன்றில் அல்லது கலாசார அலுவல்கள் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் அதற்கு இணையான நிறுவனம் ஒன்றில் இசைக் கலைஞராக 05 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்

அல்லது

பரம்பரை ரீதியான இசைக் கலைஞராக இருத்தல் (எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்)

IV. **உடற் தகைமைகள்:**

i. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலாயினும் பணியாற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உளரீதியான பொருத்தப்பாடு மனநிலையைக் கொண்டதாக இருத்தல்;
ii. 5 அடி 3 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. **ஏனைய தகைமைகள் :**

i. சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த குண ஒழுக்கத்தினையும் சிறந்த உடல் பொருத்தப்பாட்டினையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
ii. பதவியில் ஆட்சேரத்துக் கொள்ளும் பொருட்டான தகுதிகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பப் படிவத்தினை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் அத் தகுதிகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
iii. பாடல் /வாத்தியம் சகல பிரிவுகளிலும் தேர்ச்சியடைந்துள்ளமை கவனத்திற் கொள்ளப்படும்.

03. **வயதெல்லை** : விண்ணப்பபடிவத்தினைப் பொறுப்பேற்கும் திகதியில் 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

04. **ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை :**

- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையினதும் தொழில்சார் பரீட்சையினதும் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.
- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் தொழில் சார் பரீட்சைக்கு உட்படுத்தப்படும்வேளை, தகுதிமதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில் சார் பரீட்சைகளிலும் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமைப் படிமுறைக்கேற்ப பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | உரித்துடையதல்ல |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவங்கள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) | 35 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>i. பிரபல கலைஞர்களின் கீழ் தேசிய மட்ட படைப்புக்களில் கலந்துகொண்டிருத்தல்<br>ii. கலாசார நிலையங்கள் ஊடாகவோ அல்லது பிரபல கலைஞர்கள் ஊடா கவோ வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருத்தல் | 25 | |
| 4. மொழித் தேர்ச்சி | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சைகளில் காட்டும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

தொழில்சார் பரீட்சை

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளி அளவு | தேறுவதற்கான புள்ளி அளவு |
|---|---|---|
| 1. பிரதானபாடம் (பாடல்/வாத்தியம்) | 60 | 30 |
| 2. நானாவிதம் (பாடகருக்காக இசை/ இசையமைப் பாளருக்காக பாடல்) | 20 | 10 |
| 3. ஸ்வர தாளங்களின் பாடும்/எழுதும் திறன் | 20 | 10 |
| மொத்தம் | 100 | 50 |

05. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்**.- விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்யும் போது கல்வி மற்றும் பிற தகைமைகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்த வேண்டியதுடன் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவது சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமேயாகும்.

நேர்முகப் பரீட்சையில் சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதியுடன் முறையான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் அடையாளப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

1. ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

06. பதவியினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏதேனும் ஒரு விதத்தில் வற்புறுத்தல்களை மேற்கொள்வது பதவியின் பொருட்டான தகுதியற்ற நிலை ஒன்றாக அமையும்.

07. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு விடயம் தவறானது என ஒருவர் தெரிவு செய்யப்பட முன்னர் தெரிந்துகொள்ளப்பட்டால் தகுதியற்றவர் என பெயரிடவும், நியமனம் செய்ததன் பின்னர் அவ்வாறு வெளிக் கொணரப்பட்டால் பதவியிலிருந்து விலக்கவும் காரணமாக அது அமையும்.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை, அல்லது இசைவின்மை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தரணி அனோஜா கமகே,
பணிப்பாளர்,
கலாசாரஅலுவல்கள் திணைக்களம்.

கலாசாரஅலுவல்கள் திணைக்களம்,
08 ஆம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பாவனைக்காக

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இசைக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவிக்காக விண்ணப்பித்தல்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :
02. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :
03. பிறந்த திகதி :
04. வயது (2020.10.09 ஆந் திகதிக்கு) :
05. உயரம் : .......அடி ..........அங்குலம்
06. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
07. ஆண்/பெண் பால் நிலை :

08. முகவரி :
09. தொலைபேசி இலக்கம் :
10. கல்வித் தகைமை :

i. க.பொ.த. (உ. /த.)

ஆண்டு: பரீட்சைச் சுட்டெண்:

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

ii. பெற்ற பட்டம் :.....................................................................

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

iii. தேசிய சங்கீத இடைநிலை அல்லது இறுதிப் பரீட்சை/பாத்கண்டே கல்லூரியின் சங்கீத விசாரத பட்டப் பரீட்சை

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழிற் தகைமைகள் :
12. அனுபவம் :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் நான் அறிந்தவரையில் உண்மையானதும் சரியானதும் எனவும் இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்களில் ஒன்று பிழையானது என தெரிவுசெய்வதற்கு முன்னர் அறியக் கிடைத்தால் நான் தகுதியற்றவன் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் அதுதொடர்பில் வெளிக்காட்டப்பட்டால் நியமனம் செல்லுபடியற்றதாகும் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி :.................. ...........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

09-803/2

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## *நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைத் தொகுதியில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2020*

*நீர்ப்பாசன அமைச்சு*

*நீர்ப்பாசன அமைச்சின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைத் தொகுதியில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடத்தை (01) நிரப்புவதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*01.* ***ஆட்சேர்க்கப்படும் முறை.***- *அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக அதிக புள்ளியைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர் வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கப்படுவர். இங்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.*

*நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.*

*02.* **தேவையான தகைமைகள்**

(i) *கல்வி/தொழிற் தகைமைகள்*

*மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.*

*அனுபவம்*

*மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் 03 வருடங்களுக்குக் குறையாத காலம் சட்டத்தரணியாக செயற்திறனுடனான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (செயற்திறனுடனான தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுக்கொள்ளப்பட்ட காலம், திகதி மற்றும் அலுவலக முத்திரை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின்போது கையளிக்கப்படல் வேண்டும்.)*

*அல்லது*

*மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனம் ஒன்றில் சட்டத்துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத காலம் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்குரிய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.*

(i) *வழக்கு சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடனான இணைப்பாளராக செயற்படுதல்.*

(ii) *உடன்படிக்கை மற்றும் அவை சம்பந்தமாக சட்ட நடவடிக்கை;*

(iii) *உரிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கைகள்;*

(iv) *சட்ட வரைவு, சுற்றறிக்கை, ஒழுங்குவிதிகள் போன்ற சட்டங்களுக்குரிய ஆவணங்களை வழங்கும் நடவடிக்கைகள்*

(v) *பல்வேறு நிதிச்சட்ட நிறுவனங்களில் நடாத்தப்படும் சட்டம் அல்லது நீதித்துறைசார் அலுவல்கள் அல்லது பரிசீலனை நடவடிக்கைகள்.*

*(இவ் விடயம் செயலாளர், திணைக்களத் தலைவரினூடாக வழங்கப்பட்டு சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)*

பௌதீக தகைமைகள்

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலேனும் சேவைபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) *ஏனைய தகைமைகள்*

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்திற்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**03. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**

(i) இந்த நியமனம் நிரந்தரமானது. உங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கீழ்படிதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் தங்களால் அதற்காக பங்களிப்பு நிதி செலுத்துதல் வேண்டும்.

(ii) தாங்கள் மூன்று (03) வருடகால தகுதிகாண் நிலைக்கு உட்படுகின்றீர்கள். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்க்கும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது (01) வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கிணங்க பதவியில் இணைந்து 05 வருடத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கருமமொழி பற்றிய உரிய திறனைப் பெறுதல் வேண்டும் என்பதோடு அரச கருமமொழி அல்லாத மொழியில் சேவையில் இணைந்துள்ள உத்தியோகத்தர்களால் தகுதிகாண் காலத்தினுள் குறிப்பிட்ட அரச மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சேவைத்திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

04. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு வயது 21 இற்குக் குறையாமலும் 45 இற்கு கூடாமலும் இருக்க வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 47,615.00 - 10×1,335 - 8×1,630 - 17×2,170 - ரூபா 1,10,895.00 (SL-1-2016 ) மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதிக்குரிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கிணங்க அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இற்கிணங்க சம்பளம் உரித்தாகும்.)

06. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும்.**

| | பாடங்கள் | | உயர்ந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட இத்துறைக்குரிய பட்டப்பின் படிப்புப் பட்டம் | 25 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் இத்துறைக்குரிய பட்டப் பின் படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப்பின் படிப்பு சட்டத்துறை டிப்ளோமா (ஒரு வருடத்திற்குக் குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டம் சம்பந்தமான பட்டம் | | |
| | - முதலாம் வகுப்புச் சித்தி பெற்றிருப்பின் | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு உயர் (Upper class) சித்தி பெற்றிருப்பின் | 10 | |
| | - இரண்டாம் வகுப்பு (Lower class) சித்தி பெற்றிருப்பின் | 05 | 25 |
| | சட்டக் கல்லூரியின் இறுதி வருடத்தில் முதலாம் (First class) வகுப்பில் சித்தி பெற்றிருப்பின் | 10 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி வருடத்தில் இரண்டாம் வகுப்பு (Second class) சித்தி பெற்றிருப்பின் | 05 | |
| | **குறிப்பு**: கௌரவப்பட்டம் (Honest) இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திருப்பின் மட்டும் 05 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். (உயர்ந்தபட்சம் ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 02 | **மேலதிக தொழில்சார் அனுபவங்கள்** | | |
| | (i) **மேலதிக கல்வித் தகைமைகள்** | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் உரிய துறை பற்றிய ஒரு வருடத்திற்கு கூடிய டிப்ளோமா பெற்றிருப்பின் (ஒரு டிப்ளோமாவுக்கு 10 புள்ளிகள்) | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் உரிய துறை பற்றிய 06 மாதங்களுக்குக் கூடிய மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைந்த டிப்ளோமா பாடநெறிக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 05 புள்ளிகள்) | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் உரிய துறை பற்றிய 03 மாதங்களுக்குக் கூடிய மற்றும் 06 மாதங்களுக்கு குறைந்த டிப்ளோமா பாடநெறிக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 03 புள்ளிகள்) | | |
| | (இலக்கம் 01 இன் கீழ் புள்ளிகள் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தவிர ஏனைய) | | |

| | பாடங்கள் | | உயர்ந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | (ii) **மேலதிக அனுபவம்**<br>ஒரு சட்டத்தரணியாக அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் சேவை புரிந்த அனுபவம்<br>(ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் 25 புள்ளிகள்)<br>(06 மாதங்களுக்கு கூடிய மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைந்ததாயின் - 02 புள்ளிகள்)<br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படும் சட்டத்தரணியாக சேவைபுரிந்த 03 வருட சேவைக்காலம் தவிர்ந்த)<br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள சட்டத்தரணியின் அல்லது சனாதிபதி சட்டத்தரணியின் அல்லது நீதிவான் ஒருவரிடம் பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.)<br>(மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லது தனியார் துறையில் சேவை புரிந்த உத்தியோகத்தர்களுக்காக நிறுவனத்தின் தலைவரினூடாக மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தும்போது விண்ணப்பதாரர் சட்டத்துறைப் பதவியில் சேவை புரிந்தமைக்காக சேவைச்சான்றிதழ்/சான்றிதழ்களினூடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.) | 25 | 35 |
| 03 | **மொழித் தேர்ச்சி**<br>ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்புப் பட்டம்/ பட்டம்/பட்டப்பின் படிப்பு சட்ட அறிஞர் பட்டம்/சட்ட அறிஞர் பட்டம் (உரிய பரீட்சையின் வினாப்பத்திரங்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே விடைகள் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் ஆங்கில மொழி சம்பந்தமான சான்றிதழ் பாடநெறிக்காக (01 வருடத்திற்கு அல்லது 1500 மணித்தியாலங்கள்)<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் ஆங்கில மொழி சம்பந்தமான சான்றிதழ் பாடநெறிக்காக<br>- 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்<br>- 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள்<br>(உயர்ந்தபட்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும்) | 15<br>10<br>07<br>05 | 15 |
| 04 | **தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான அறிவு**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பட்டம் சம்பந்தமாக தகவல் தொழில் நுட்பத்தை பிரதான பாடமாக மேற்கொண்டிருப்பின்<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் ஒரு (01) வருடத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான பாடநெறி அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான சான்றிதழ் பாடநெறிக்காக<br>• 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்<br>• 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள்<br>(உயர்ந்தபட்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 10<br>07<br>05<br>03 | 10 |

| | பாடங்கள் | | உயர்ந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 05 | **நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை** | | |
| | (i) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு | 05 | |
| | (ii) சட்டத்துறையில் நவீன நடைமுறைகள் பற்றிய அறிவு | 05 | 15 |
| | (iii) தெளிவாகக் கருத்துத் தெரிவிக்கும் திறமை மற்றும் ஆளுமை | 05 | |
| மொத்தம் | | | 100 |

7. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.-

- பொருத்தமான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூரணப்படுத்தப் பட்டுள்ள விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர் மட்டுமே.

- நேர்முகப் பரீட்சையில் சகல ஆவணங்களிலும் மூலப்பிரதி மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

- நேர்முகப் பரீட்சையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் விநியோகிக்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு.

8. **விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்**.-

(i) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2020.10.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பிக்க வேண்டிய மாதிரி விண்ணப்பம் இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படுகிறது. விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை (A4) அளவிலான கடதாசியை உபயோகித்து முதலாவது பக்கத்தில் இலக்கம் 1.0 தொடக்கம் 3.0 வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 4.0 தொடக்கம் 06 வரையும், மூன்றாம் பக்கத்தில் இலக்கம் 7.0 தொடக்கம் 8.0 வரையும் அமையுமாறு தனது கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும். (விண்ணப்பப்பத்திரத்தின் நகல் பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.)

(iii) விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரர் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு/ முப்படை அதிகாரி அல்லது ரூபா 47,615.00 தொகையை மாதாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர பதவியையுடையவர்கள் போன்றவர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தனது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்றவாறு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பம்

இரத்துச்செய்யப்படும். ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்கு உரிய நடவடிக்கைகளுக்கு அமைய சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இந்த வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் சம்பந்தமான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் சம்பந்தமாக அல்லது இந்த ஆட்சேர்த்தல் செயன்முறையில் ஏதாவது சிக்கல்கள் காணப்படுமாயின் அது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலானது தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் காணப்படுவதோடு ஏதேனும் தெளிவின்மை காணப்பட்டால் சிங்கள மொழியிலுள்ள அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி,

செயலாளர்,
நீர்ப்பாசன அமைச்சு.

2020, செத்தெம்பர் 09.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**நீர்ப்பாசன அமைச்சின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2020**

| | |
|---|---|
| நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும். சிங்களம்-1/தமிழ் - 2/ஆங்கிலம் - 3)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக மட்டும்)

**குறிப்பு** : விண்ணப்பிக்கும் மொழியை மாற்ற முடியாது.

---

01.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./ Mrs./ Miss ..........................................................................................................
(உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.2 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :..........................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி : ..........................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி ..........................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

02. 2.1 நிரந்தர முகவரி : ..........................................................................................................
(தமிழில் /சிங்களத்தில்)

2.2 நிரந்தர முகவரி : ..........................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

03. 3.1 ஆண்/பெண் :

ஆண் 0

பெண் 1

3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் பற்றி :

திருமணமானவர் - 1

திருமணமாகாதவர் - 2

3.3 பிறந்த வருடம் :

3.4 2020.10.23 அன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

3.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:

04. 4.1 நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கிணங்க பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம்.

| தகைமைகள் பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|
| .................................................................... | ........................................... |
| .................................................................... | ........................................... |
| .................................................................... | ........................................... |

மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியம் செய்த திகதி :................

4.2 விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழ் உள்ள ஒவ்வொரு தகைமைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டதற்குரிய விபரம் :

4.3 மேலதிக கல்வித் தகைமைகள் : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

4.4 மேலதிக தொழில்சார் அனுபவங்கள் : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

4.5 மேலதிக அனுபவம் : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

4.6 மொழித் தேர்ச்சி : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

4.7 தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான அறிவு : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

05. தாங்கள் ஏதாவது குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா?
உரிய கூட்டினுள் குறிப்பிடுக (ஆம் எனின் விபரத்தை தருக)
..........................................................................................................

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ் விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் ஆகும் என்பதோடு அனைத்துப் பிரிவுகளும் சரியாக பூரணப்படுத்தியுள்ளேன் எனவும், என்னால் வழங்கப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நான் ஆட்சேர்ப்பதற்கு தகுதியற்றவர் என்பதும் நியமனம் கிடைக்கப்பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன் என்பதோடு, சகல ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்படுவேன் எனவும் குறிப்பிடுகின்றேன்.

............................................
திகதி: ............................ விண்ணப்பதாரரின் கையொப்பம்.

07. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................................ அவர்களை தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் ............ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
திகதி : ...................................... உத்தியோகத்தரின் கையொப்பம்.

முழுப் பெயர் : ...................................
பதவி : .......................................
(அலுவலக முத்திரை)

08. திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

மேலே விபரிக்கப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ........................................................................................ என்பவர் இத்திணைக்களத்தில்/இந்நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும், வேலை மற்றும் நடத்தை என்பன திருப்தியானது எனவும், அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் இல்லை எனவும் இப்பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்பட்டால், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ......................................
பெயர் : ..................................
பதவிப் பெயர் : ..................................
முகவரி :........................................
(அலுவலக முத்திரை)

09-802

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சு

### வணிகக் கப்பற்றுறை செயலகம்

*உதவி கப்பல் பிரயாண உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020*

1.0 வணிகக் கப்பற்றுறை செயலகத்தின் இணைந்த சேவை வகுதிக்கான (உதவி கப்பல் பிரயாண உத்தியோகத்தர், கப்பல் பிரயாண உத்தியோகத்தர்) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 08 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கப்பல் பிரயாண உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2020, திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கப்பல் பிரயாண உத்தியோகத்தர்களுக்கான இந்தப் பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

3.0 (i) இந்துப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதோடு, பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக அவரால் தீர்மானிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதலும் வேண்டும்.

(ii) பரீட்சை விண்ணப்பதாரர்களுக்கான ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக பிரசுரிக்கப் பட்டுள்ளது. இந்த விதிகள் மீறப்படுமாயின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்படும் தண்டனைக்கு ஆட்படுதலும் வேண்டும்.

4.0 **தகைமைகள்** .- III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கப்பல் பிரயாண உத்தியோகத்தர் நியமனமொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையினைப் பெறுவர்.

5.0 விண்ணப்பமானது இந்த அறிவித்தலிலுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதாதல் வேண்டும். இந்த மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை தயாரிக்க வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக 2020, ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல.1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சைகள் ஆணையாளருக்கு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6.0 பரீட்சை அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் விடயங்கள் ஒவ்வொன்று சார்பிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் விதத்தில் அவர்களுடைய ஆள் அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஏதேனும் ஆவணமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோன்று பரீட்சை அபேட்சகர்கள் ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் விதத்தில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளிக்க வேண்டும். அதேபோன்று தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்வதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்த நேரத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும்வரை பரீட்சை நடாத்தும் அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரரை அடையாளம் காணும் விதத்தில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் தெரியும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

7.0 (i) **விண்ணப்பங்கள்** - மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள 1.0 தொடக்கம் 6.0 வரையிலான பந்திகள் 1 ஆம் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் இருக்கும் விதத்தில் 'A 4' அளவிலான கடதாசியில்

விண்ணப்பமானது தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தட்டச்சிட்டு தயாரித்துக் கொள்ளலாம் என்பதோடு, அதனை செம்மையாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரர் தன் சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, விண்ணப்பதாரர் ஒருவர் விண்ணப்பமொன்றினை மாத்திரமே முன்வைக்கலாம். விண்ணப்பங்களின் நிழற்படப் பிரதிகள் அனுப்பப்படலாகாது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக அனுப்பப்படாத அத்துடன் முழுமையான தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பத்தின் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரானது சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்களமொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ்மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதாகவா என்பது பற்றியும் தகவல் அனைத்தும் உள்ளடக்கிய விண்ணப்பம் செம்மையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும் உரிய பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்வாங்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரர் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இந்த விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(ii) **பிழையான தகவல்களுக்கான தண்டனை** - விண்ணப்பப்பத்திரத்தை நிரப்பும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவரென எண்பிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்த சந்தர்ப்பத்திலும் அவருடைய அபேட்சகத் தன்மையை இரத்துச் செய்யலாம்.

(iii) முதற்தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை. ஆயினும், அதன்பின்னர் தோற்றும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் உத்தியோகத்தர்கள் முழுப்பரீட்சைக்கும் தோற்றுவார்களாயின் அல்லது ஒரு விடயத்திற்கு மேல் தோற்றுவார்களாயின் 500/- ரூபாவும் ஒரு விடயத்திற்கு மாத்திரம் தோற்றுவார்களாயின் 250/- ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 என்பதன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய விதத்தில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் /உபதபால் அலுவலகத்திற்கோ அல்லது மாவட்ட /பிரதேச செயலகத்திற்கோ பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொள்ளும் பற்றுசீட்டு விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். இந்தப் பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக எவ்வித அறவீடுகளும் செய்யப்பட மாட்டதென்பதை அறியத்தருகின்றேன். எந்த சந்தர்ப்பத்திலும் இந்தக் கட்டணமானது மீளச் செலுத்தப்படமாட்டாது. இந்தப் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணமானது பிற எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படவும் மாட்டாது. அத்துடன் பரீட்சைக் கட்டணம் சார்பில் முத்திரை அல்லது காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் உள்ளார்களெனக் கருதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் செம்மையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான கால அட்டவணையின் பிரதியுடன் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளிலும் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அதற்கான பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி என்பவற்றுடன் தங்களுடைய முழுப்பெயர், முகவரி, ஆள்அடையாள அட்டையின் இலக்கம், பரீட்சையின் பெயர் ஆகியவற்றையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திடம் இது சம்பந்தமாக கேட்டு அறிந்துகொள்ள வேண்டுமென்பதோடு, தங்களுடைய மேற்போந்த விபரங்களும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதியும் பெக்ஸ் மூலம் தங்களுக்கு அனுப்பும் பொருட்டு தங்களுடைய பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் முன்வைப்பது மிகப் பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவர்களுடைய ஒப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரங்களை கையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**: விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டுள்ளாரென கருதப்படலாகாது.

9.0 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் அபேட்சகரின் ஒப்பம் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

10.0 அபேட்சகரானவர் பரீட்சைக்காக தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவருடைய ஒப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை கையளித்தல் வேண்டும்.

11.0 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இயலுமாகும் வகையில் திணைக்களத் தலைவரினால் உத்தியோகபூர்வ லீவு வழங்கப்படுதல் வேண்டும். பயணக் கட்டணம் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

12.0 இந்தப் பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். உரிய சேவைக்கு இணைவதற்கான பரீட்சையில் தோற்றிய மொழிமூலமோ அல்லது அரசகரும மொழியொன்றிலோ இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கும் தாம் கல்வி கற்ற மொழிமூலம் அல்லது அரசகரும மொழியொன்றில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13.0 தாம் விரும்பின் விடயங்கள் ஒவ்வொன்றையும் வெவ்வேறாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றுவதற்கு உத்தியோகத்தரானவருக்கு முடியும். ஆயினும், சித்தியடைவதற்காக விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய மொத்த புள்ளிகளில் ஆகக்குறைந்தது நூற்றுக்கு நாற்பது வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்காக வணிகக் கப்பற்துறை செயலகத்தின் இணைந்த சேவை வகுதிக்கான (உதவி கப்பல் பிரயாண உத்தியோகத்தர் மற்றும் கப்பல் பிரயாண உத்தியோகத்தர்) ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள இணைப்பு - 01 ஐப் பார்க்கவும்.

14.0 அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவாக உத்தியோகத்தர்கள் அனைவரும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயாரிக்க வேண்டுமென்பதோடு, அவை அரசகரும மொழியிலேயே நிரப்புதல் வேண்டும்.

15.0 பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகள் உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணையானது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வணிகக் கப்பற்துறை செயலகத்தின் பணிப்பாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

16.0 **பரீட்சைக்கான பாடத்திட்டம்** - விண்ணப்பதாரர்கள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கிய எழுத்துமூல பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

| | விடயம் | புள்ளிகள் | காலம் | விடய இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை விதி | 100 | 01 மணி | 01 |
| 2. | நிதி ஒழுங்குவிதி பற்றிய அடிப்படை அறிவு | 100 | 01 மணி | 02 |

16.1 தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை விதி :
தாபன விதிக்கோவை தொகுதி I இலுள்ள i, ii, vii, xiv, xxiv, xxvii, xxviii, xxx, xxxiii ஆம் அத்தியாயங்களும் தொகுதி II இலுள்ள xlviii ஆம் அத்தியாயமும்

16.2 நிதி ஒழுங்குவிதி பற்றிய அடிப்படை அறிவு :
நிதி ஒழுங்குவிதியின் i, iv, v, vi, viii, xiii ஆம் அத்தியாயங்களும் அரசாங்க பெறுகை வழிகாட்டலும்.

17.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலிலுள்ள பதங்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு உள்ளதென தெரியவரும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தல் வலுவில் இருக்குமென கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமொன்று இருப்பின் அது சம்பந்தமாக வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதியினால் தீர்மானிக்கப்படும்.

ஏ. டபிள்யு. செனெவிரத்ன,
வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி.

வணிகக் கப்பற்துறை செயலகம்,
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சு,
1 ஆம் மாடி, பிரிஸ்டல் கட்டடம்,
43-89, யோர்க் வீதி,
கொழும்பு - 01.
2020, செத்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உதவி கப்பல் பிரயாண உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020**

**First Efficiency Bar Examination of Assistant Shipping Officer Service - 2020**

(அலுவலக உபயோகத்துக்கு)

விண்ணப்பிக்கும் மொழிமூலம் (உரிய இலக்கத்தை இந்த கூட்டினுள் இடவும்)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

1.0
- 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :........................................................................
- 1.2 கடைசியாக வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் அதன் பின்னரும் வரும் விதத்தில் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): .....................................
- 1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : ................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும் :
- 2.1 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..........................
- 2.2 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில் /தமிழில்): ....................
- 2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ...........................

3.0 பால் : பெண் - 1
ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

4.0 தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் : ...................................

5.0 தொலைபேசி இலக்கம்: ..........................................

6.0 தாங்கள் தோற்றும் பாடம் /பாடங்கள்

| | விடயம் | விடய இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

7.0 தற்போது வகிக்கும் பதவி :
- 7.1 பதவி : ......................
- 7.2 நியமனக் கடிதத்தின் இலக்கம்: .............

8.0
- 8.1 தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையா? : ......................
- 8.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவையாக இல்லாத பட்சத்தில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: ............
- 8.3 தபால் /உபதபால் அலுவலகம் அல்லது மாவட்ட /பிரதேச செயலகம் : ..........................
- 8.4 பற்றுச்சீட்டு இலக்கம் : .............................................
- 8.5 திகதி : ..........................

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாகும்) |
|---|

9.0 **விண்ணப்பதாரரின் சான்றிதழ்** :

மேற்குறிப்பிட்ட விபரங்கள் பிழையற்றவையெனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளதெனவும் நான் நான் பரீட்சைக்குத் தோற்றுவது ................... தடவை என்பதனால் பரீட்சைக்

கட்டணம் செலுத்துவது தேவையற்றதெனவும் /........................ ரூபாவை பரீட்சைக் கட்டணமாக ........................ தபால் /உபதபால் அல்லது மாவட்ட /பிரதேச செயலகத்துக்கு .............. ஆம் திகதியன்று செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் பெறுபேறுகளை வழங்குதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் பரீட்சை சட்டத்திலுள்ள சகல ஏற்பாடுகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.....................................

திகதி : ........................... விண்ணப்பதாரரின் கையொப்பம்

**குறிப்பு**.- திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பில் கைச்சாத்திடுவதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் முன்னிலையில் விண்ணப்பதாரர் கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல் :**

எனது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தரும் தனிப்பட்ட வகையில் அறிந்தவருமான திரு./ திருமதி / செல்வி ..............................................., எனது முன்னிலையில் .................. ஆம் திகதியன்று கையொப்பமிட்டாரெனவும் அவர் பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவை என்பதனால் பரீட்சைக்கட்டணத்திலிருந்து விடுவிப்பது பொருத்தமானதெனவும் /உரிய பரீட்சைக்கட்டணம் செலுத்தியுள்ளரெனவும் அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................................

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

பெயர் : ......................................
பதவிப் பெயர் : ..................................
முகவரி : ..............................................
திகதி : .........................

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(i) மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டதெனவும்,
(ii) இந்த உத்தியோகத்தர் இணைந்த சேவையை சேர்ந்தவர் எனவும் / அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பினைத் தெரிவித்துள்ளாரெனவும்,
(iii) உத்தியோகத்தரானவர் இந்தப் பரீட்சைக்கு இதற்குமுன்னர் தோற்றியுள்ளார்/தோற்றவில்லை* எனவும்,
(iv) உத்தியோகத்தரானவர் இதற்குமுன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளமையினால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இந்த விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதெனவும்,
(v) உத்தியோகத்தரானவர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடயவரெனவும்,

நான் உறுதிப்படுத்துகின்றேன்.

* தேவையற்ற சொற்களை வெட்டவும்

...............................................................,

திணைக்களத் தலைவரின் ஒப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

பெயர் : ......................................
பதவிப் பெயர் : ..................................
முகவரி : ..............................................
திகதி : .........................

*09-644*

---

### காணி அமைச்சு

### நில அளவைத் திணைக்களம்

*நில அளவைத் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சை*

நில அளவைத் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் நிலவும் பின்வரும் பதவிகளுக்கு நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பதவிகள் :

அட்டவணை இலக்கம் 01 - ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பதவிகள் :

| தொடர் இலக்கம் | பதவி | | நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வகுப்பு |
|---|---|---|---|---|
| 01 | கட்டட நிருவாகி | கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுகின்ற வெற்றிடம் ஆகும். சேவைக் காலம் முழுவதும் தலைமை அலு வலகத்தில் கடமையாற்ற வேண்டும். | 01 | வகுப்பு III |
| 02 | போக்குவரத்து உத்தியோகத்தர் | | 01 | வகுப்பு III |

1.2 பதவிக்கான கடமையின் தன்மை

அட்டவணை இலக்கம் 02 - பதவிகளுக்கான கடமையின் தன்மை

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | கடமையின் தன்மை /பிரதான கடமைகள் |
|---|---|---|
| 1. | கட்டட நிருவாகி | • வருடாந்த கட்டட பராமரிப்பு திட்டத்தினை தயாரித்தல்<br>• கட்டடங்களைப் பேணும் செயற்பாட்டு முகாமைத்துவத்திற்கு யோசனைகளை சமர்ப்பித்தல்.<br>• பணிக்குழு கண்காணிப்பு.<br>• பராமரிப்பதற்கு தேவையான மூலப்பொருட்கள், உபகரணங்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் முகாமை செய்தல்<br>• கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கான மதிப்பிடல் மற்றும் சிபாரிசு பெறல் |
| 2. | போக்குவரத்து உத்தியோகத்தர் | • திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களை செலுத்தக்கூடிய பொருத்தமான நிலையில் பேணுவதற்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல்.<br>• திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான சிபாரிசு மற்றும் தொழில்நுட்ப அறிக்கையினை வழங்குதல்.<br>• திருத்தப்பட்ட பின்னர் வாகனங்களின் செலுத்தப்படும் தன்மையினை பரிசீலனை செய்தல், வாகன பராமரிப்பு தொடர்பாக பரிசீலனை செய்தல்.<br>• சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குதல்.<br>• வாகன விபத்துக்களின் போது உடனடியாக பரிசீலனை செய்து அறிக்கை வழங்குதல் மற்றும் பாவனைக்குட்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுதல் ஆகிய நடவடிக்கைகள்<br>• சூழல் நேயச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக வாகனங்களைத் தயார்படுத்தல் |

2.0 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது எந்தவொரு எண்ணிக்கையையும் நிரம்பாமலிருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

3.0 **சம்பளம்**

அட்டவணை இலக்கம் 03

| வகுப்பு | சம்பள அளவுத்திட்டம் | அடிப்படை மாதாந்த சம்பளம் |
|---|---|---|
| வகுப்பு III | மாதாந்தம் ரூபா 31,040.00 - 10 × 445 - 11×660- 10×730-10×750 - ரூபா 57,550.00 (MN 3-2016) | ரூபா 24,626.00 (பொ. நி. சு. இல. 03/2016 இன் உப அட்டவணை II இன் விதிமுறைகளுக்கு அமைவாக) |

| வகுப்பு | சம்பள அளவுத்திட்டம் | அடிப்படை மாதாந்த சம்பளம் |
|---|---|---|
| வகுப்பு II | மாதாந்தம் ரூபா 31,040.00 - 10 × 445 - 11×660- 10× 730 -10×750- ரூபா 57,550.00 (12 ஆம் சம்பள படியில் ஆரம்பமாகும்) (MN 3-2016) | ரூபா 28,684.00 (பொ. நி. சு. இல. 03/2016 இன் உப அட்டவணை II இன் விதிமுறைகளுக்கு அமைவாக) |
| வகுப்பு I | மாதாந்தம் ரூபா 31,040.00 - 10 × 445 - 11×660- 10× 730 -10×750- ரூபா 57,550.00 (23 ஆம் சம்பள படியில் ஆரம்பமாகும்) (MN 3-2016) | ரூபா 34,506.00 (பொ. நி. சு. இல. 03/2016 இன் உப அட்டவணை II இன் விதிமுறைகளுக்கு அமைவாக) |

4.0 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். இந்த நியமனமானது 03 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவதுடன், இந்தப் பதவி கொழும்பு தலைமை அலுவலகத்தில் காணப்படுகின்ற பதவி என்பதால் சேவைக்காலம் முழுவதும் தலைமை அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பத்தில் காணப்படுகின்ற அரச சேவையில் நியமிப்பதற்கான பொது நிபந்தனைகளுக்கும் உட்பட வேண்டும்.

5.0 **தகைமைகள்.-**

5.1 **அடிப்படைத் தகைமைகள் :**

(அ) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

5.2 **கல்வித் தகைமைகள்.-**

(அ) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் ஆகிய இரண்டு (02) பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.3 **தொழில் தகைமைகள்.-**

போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக இயந்திரவியல் துறையிலும், கட்டட நிருவாகிப் பதவிக்கு கட்டட பொறியியல் துறையிலும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(அ) மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(ஆ) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் தேசிய டிப்ளோமா

அல்லது

(இ) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா

அல்லது

(உ) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் I ஆம் பாகத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(ஊ) தொழில் துறைக்குரிய தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 6 இனை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(எ) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களில் வினவி கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.4 **உடல் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் தமது பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டிருக்க வேண்டும்.

*குறிப்பு* : விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் பதவிகளுக்குரிய எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

6.0 **பொய்யான தகவல்களை வழங்குதல்.-** இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக ஏதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமையில்லையெனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தாரர் அந்தஸ்த்து இரத்துச் செய்யப்பட முடியும். சேவைக்கு இணைக்கப்பட்ட பின்னர் விண்ணப்பதாரி வழங்கியுள்ள ஏதேனுமொரு தகவல் பொய்யானது எனத் தெரிந்தும் சமர்ப்பித்துள்ளார் என அல்லது ஏதேனுமொரு முக்கிய விடயத்தினை மறைத்துள்ளார் போன்ற விடயங்கள் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்பட முடியும்.

7.0 **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை :**

7.1 **எழுத்துப் பரீட்சை.-** பரீட்சையானது இரண்டு பாடங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை ஆகும். இந்தப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

| | | பெற்றுக்கொள்ளக்கூடிய மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| I. | நுண்ணறிவுப் பரீட்சை | 100% | 40% |
| II. | விடயம் சார் தொழில்நுட்பப் பரீட்சை | 100% | 40% |

7.2 **பாடத்திட்டம்**

(i) **நுண்ணறிவுப் பரீட்சை :** பரீட்சார்த்தியின் கிரகித்தல் பகுத்தறிவு, அவரது கிரகித்தல் பகுப்பாய்வு நிலைமை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களை உள்ளடக்கியது.

(ii) **விடயம்சார் தொழில்நுட்பப் பரீட்சை :**

கணிதம் : இயற்கணிதம் (சமனிலி, மாறிகள், தரம், மடக்கை) திரிகோண கணிதம் (சமன்பாடுகள், திரிகோண கணித சமன்பாடுகளைத் தீர்த்தல்) புள்ளிவிபரவியல் (இடைவிலகல், இடை, நியம விலகல், நிகழ்தகவு)

பௌதிகவியல் :

ஒளி மற்றும் ஒளியியல் (விம்பம் மற்றும் ஒளிவிலகல், வளைமேற்பரப்பு உந்துதல், அரிய ஒளியியல் சூத்திரங்கள், மூலக்கூறு உயிரியல் நுண்ணோக்கி, தொலை நோக்கி)

நியுட்டனின் இயக்க விதி (அளவிடுதல் மற்றும் திசைகாட்டி, நகர்வு பற்றிய நியுட்டனின் விதி, உந்தம்)

பல்வேறு தலைப்புக்கள் :

புவியியல் அறிமுகம் (பூமியின் வடிவம், இட அமைவியல் ஆகியவை)

திடப்பொருட்களின் கோணப்பார்வை மற்றும் கணிப்பு பகுப்பாய்வு

8.0 **பொது நேர்முகப் பரீட்சை.-**

8.1 நில அளவையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளில் ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை, பெறுபேறுகளின் திறமை ஒழுங்கு என்பவற்றின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

8.2 தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

9.0 **ஆட்சேர்ப்புச் செய்தல்.-** இலங்கை தொழில்நுட்ப சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

10.0 **விண்ணப்பப் படிவங்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்.-**

(அ) இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 21x29cm (A4) அளவுடைய தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரிகள் தாங்களாகவே விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்க வேண்டும். 01 தொடக்கம் 04 வரையான தலைப்புக்கள் 01 ஆம் பக்கத்திலும் இலக்கம் 04.1-10.1 வரையிலான தலைப்புக்கள் 02 ஆம் பக்கத்திலும், இலக்கம் 10.2-11.1 வரையான தலைப்புக்கள் 03 ஆம் பக்கத்திலும், இலக்கம் 12-14 வரையிலான தலைப்புக்கள் 04 ஆம் பக்கத்திலும் 15 ஆம் இலக்கமுடைய தலைப்பு 05 ஆம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் ஊடாகவும், கூட்டுத்தாபனம் உள்ளூராட்சி நிறுவனம் ஆகியவற்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாகவும் உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ) விண்ணப்பபதாரிகள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்களை தயாரிக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்துடன் தங்களின் தொழில் தகைமைகளை உறுதிப்படுத்தும் பாடநெறிகளின் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அனுப்பப்பட வேண்டும்.

(உ) குறிப்பிட்ட மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பரீட்சைக்கு கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத பூரணமற்ற நிலையில் காணப்படும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சரியான முறையில் விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தாமையினால் ஏற்படும் பாதக விளைவுகள் விண்ணப்பதாரியினாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளது என்பதுடன், பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு அமைவாக உள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரியினால் பரிசீலனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஊ) விண்ணப்பப்படிவம் கிடைத்துள்ளமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

**கவனத்திற்கு.**- பரீட்சைக்கு தோற்றுவதற்காக தெரிவு செய்த பரீட்சை நிலையத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

10.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் ஊகத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி 2020.10.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நில அளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவே அன்றி பதவிக்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என பரிசீலனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என தெரியவருமிடத்து விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்த்து இரத்துச் செய்யப்படும்.

10.2 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப சேவை பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

10.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பதவிகளிலுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2016 தரப்படுத்தலுக்கு அமைவாக மூன்றாம் அல்லது சிரேஷ்ட மட்டத்திலான அரசாங்க சேவைகளில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

11.0 **பரீட்சைக் கட்டணம்** .- பரீட்சைக் கட்டணம் ரூபா 800.00 ஆகும். இந்த தொகையினைக் கொழும்பு- 05, கிருல வீதி, இலக்கம் 150 இல் அமைந்துள்ள நில அளவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவு அல்லது ஏதேனும் ஒரு மாவட்ட நில அளவைத் திணைக்களம் அல்லது தியத்தலாவை அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியினை எதிர்காலப் பயன்பாட்டிற்காக வைத்திருக்க வேண்டும்). எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

12.0 **விண்ணப்பப்படிவத்தினை அனுப்புதல்.**- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் 2020.10.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
நில அளவைத் திணைக்களம்,
த. பெட்டி இல. 506,
கொழும்பு.

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலையத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்க வேண்டும். தனது பரீட்சை அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டார். பரீட்சார்த்தி தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

14.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

15.0 இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் ஏதேனும் இருப்பின், அது தொடர்பாக நில அளவையாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

ஏ. எல். ஷியாமலீ சித்ரலேக்கா பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு - 05,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

## நில அளவைத் திணைக்களத்தில் நிலவுகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவை வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சை

மாதிரிப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படவேண்டும்.

☐
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-
சிங்களம் - 1
தமிழ் - 2 ☐
ஆங்கிலம் - 3

(உரிய இலக்கத்தினை கூட்டிற்குள் இடவும்)

விண்ணப்பிக்கும் பதவி (முன்னால் உள்ள கூட்டினுள் X அடையாளம் இடவும்)

கட்டட நிருவாகி ☐
போக்குவரத்து உத்தியோகத்தர் ☐

1.0

1.1 முதலெழுத்து இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................
..........................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதா : PERERA, A. B. C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................................
..........................................................................................

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..............................................................................................................
..........................................................................................................................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

1.5 பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

1.6 2020.10.23 ஆந் திகதியில் வயது :
வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

1.7 பால் : பெண் - 1, ஆண் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டிற்குள் இடவும்) | |

1.8 குடியியல் நிலை : விவாகமானவர் | | விவாகமாகாதவர் | |

2.0 2.1 நிரந்தர முகவரி : ..........................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி: ..........................................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி : .........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.4 தொலைபேசி இலக்கம் (இருக்குமாயின்) : ..................................................................................................

3.0 3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் : ........................................................

3.2 பிரதேச செயலகப் பிரிவு : ..........................................................................................

3.3 கிராம அலுவலர் பிரிவு : ........................................................................................

4.0 கல்வித் தகைமைகள் : (உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவேண்டும்.)

4.1 க. பொ. த. (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம்:.............................
(ii) சுட்டிலக்கம்:......................
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த (உ./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்
(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம்:.............................
(ii) சுட்டிலக்கம்:......................
(iii) பெறுபேறு :........................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.0 தொழில்/ தொழில்நுட்ப தகைமைகள்: (உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்.)

5.1 பூர்த்தி செய்துள்ள பட்டம்/டிப்ளோமா : .........................................................

5.2 பட்டம்/டிப்ளோமா பயின்ற நிறுவனத்தின் பெயர் : ...............................................................................

5.3 பட்டம்/டிப்ளோமாவின் காலம் : ....................................................................................

6.0 வேறு தகைமைகள் ..........................................................................................................................................
..........................................................................................................................................................

7.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டினுள் X அடையாளம் இடவும்.)

ஆம் ☐ இல்லை ☐

7.1 "ஆம்" எனில் விபரங்களைக் குறிப்பிடவும் : ......................................................................................................

8.0 விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் தொழில் ஒன்றில் ஈடுபட்டு விலகிச் சென்ற நபர் எனில் அவ்வாறு விலகியமைக்குரிய காரணம் :....................................................

9.0 பரீட்சைக் கட்டணம் தொடர்பான விபரங்கள் :

9.1 பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் :....................................................

9.2 பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :....................................................

9.3 செலுத்திய தொகை ரூ. :....................................................

பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருக்கவும்.)

10.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமல் இருத்தல் மற்றும்/ அல்லது தவறாக பூரணப்படுத்தப்பட்டிருத்தல் போன்ற காரணங்களால் ஏற்படும் பாதகமான விளைவுகளை ஏற்றுக்கொள்வதற்கு சம்மதிக்கின்றேன். மேலும், இங்கு சகல பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்படும் இந்த வெளிப்படுத்தலானது பொய்யானது என நிரூபிக்கப்படுமிடத்து நியமனம் செய்யப்பட முன்னர் தகுதியிழக்கப்படும் எனவும் நியமனம் கிடைத்த பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் நன்கு அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் பெறுபேறு வெளியிடப்படுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

.............................. ....................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி.................................................................. என்பவரை தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் என்றும், அவர் ................................ ஆம் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ....................................
திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர்:..................................
பதவி :..........................................

முகவரி:..................................................

(பதவி முத்திரை இட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

12.0 தற்போது அரசாங்க அல்லது பகுதி அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் :

திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றுரை :

இந்த விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி ...................................... என்பவர் .................... திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................. ஆம் திகதி தொடக்கம் .................. ஆம் திகதி வரை .................... ஆக கடமையாற்றுவதுடன், அவருக்கு எதிராக ஒழுக்காற்று குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன/பதிவாகவில்லை. அவரது நடத்தை மற்றும் வரவு மகிழ்ச்சிகரமானவை/திருப்தியற்றவை. உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், அதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும், அவர்...................... பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதனை தெரிவிக்க விரும்புகின்றேன்.

திகதி :......................... ...............................................

திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

09-810

---

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பபிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் - 2019 (2020)

இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு 3இன் கீழ் குறித்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தலுக்காகத் தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | லிதோ ஓவ்செட் பதிப்பவர் மற்றும் இயந்திர இயக்குநர் | 14 |
| 02 | எழுத்து அச்சக இயந்திர இயக்குநர் | 03 |
| 03 | அச்சுப்பதிப்பு முன் திட்டமிடுபவர் | 01 |
| 04 | கணினி தட்டச்சு மற்றும் அச்சகக் கோலம்வரைபவர் | 08 |
| 05 | அச்சுவேலை முடிப்பவர் | 02 |
| 06 | அச்சக தொழினுட்பவியலாளர் | 02 |

01. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அதன் போது பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட (05 ஆவதில் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளியிடும் திட்டத்திற்கேற்றவாறு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

02. **தகைமைகள்**

I. பொதுவான தகைமைகள்

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன் நடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நிலையைக் கொண்டிருக்கவும் வேண்டும்.
- ஏதாவது சமயத்தலைவராக இருக்க முடியாது.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவினது கடமை விதிக்கோவை சட்டத்தில் 5 ஆவது அத்தியாயத்திற்கேற்ப அரசாங்க சேவைக்கு நியமிப்பதற்கு பொருத்தமில்லாதவராக இருத்தல் கூடாது.

- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் எல்லாவற்றையும் பூரணப்படுத்தி இருக்கவேண்டும்.

- இரவு பகல் போன்ற இரு வேளைகளிலும் கடமையாற்றக்கூடியவராக இருப்பதுடன் ஆண் விண்ணப்பதாரி களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். அதற்கேற்ப 2002.10.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரோ 1985.10.25 ஆந் திகதி அல்லது அதன் பின்னரோ பிறந்த ஒருவர் மட்டுமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

II. கல்வித் தகைமை

அ. கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்,கணிதம் மற்றும் மேலும் இரண்டு (2) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. கணினி தட்டச்சு மற்றும் அச்சுப்பதிப்பு கோலமிடுபவர் பதவிக்கு மட்டும் மேலே (அ) இல் உள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக க.பொ.த (சா.தர) பரீட்சையிலே ஆங்கில மொழிப்பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

III. தொழில் தகைமைகள்

அ. 3 ஆம் சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த அச்சகத் தொழினுட்பவியலாளர் பதவிக்காக,அச்சகத் தொழினுட்பவியலாளர்/மின் தொழினுட்பவியலாளர் துறைக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) 5 மட்டத்திலான சான்றிதழையோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமனாக மேலேயுள்ள பதவிகளுக்கேற்ப பயின்று பெற்றுக் கொண்ட வேறு சான்றிதழ் ஒன்றையோ கொண்டிருத்தல்.

ஆ. 3 ஆம் சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த ஏனைய சகல பதவிகளுக்கும் அந்தந்த பதவிகளுக்குப் பொருத்தமானதுறைக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) 5 மட்டத்திலான சான்றிதழ் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் அதனை ஒத்த மேற்படி துறைகளுக்கு உரியவாறு பயின்று பெற்றுக் கொண்ட சான்றிதழ்.

இ. அச்சுவேலை முடிப்பவர் பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுள் கமராவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட படங்களை அச்சுத்தகடுகளில் பிரதியீடு செய்தல், அச்செடுக்கப்பட்ட அச்சுத் தகடுகளை மேலும் விருத்தி செய்தல் (Develop), கைப்பிரதி அல்லது அச்சுப்பிரதியை அச்சிடுவதற்காக அச்சு எழுத்துக்களை இணைத்தல்(நிறங்களைத் தீர்மானித்தல்) மற்றும் செயல் முறைக் கமராவினை செயற்படுத்துதல் தொடர்பான திறமையைக் காட்டும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

IV. உடற் தகைமை

எல்லா விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப்பகுதியிலும் கடமையாற்றுவதற்குப் போதுமானளவு உடற் தகைமை களையும் சிறந்த மனோநிலையையும் கொண்டவராகவும் இருக்கவேண்டும்.

**03. கடமையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகளும் கடமை நிபந்தனைகளும்:**

I. இந்தப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உடையதுமாகும். உங்களுக்கு ஓய்வூதிய சம்பளமுறைமை தொடர்பாக அரசினால் முன்வைக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்படவேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைகளுக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் முறைகளுக்கு பங்களிப்பு செய்யவேண்டும்.

II. இந்தப் பதவி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பதவியாகும்.

III. இந்தப் பதவியானது 03 வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை விதிக் கோவையின் 3ஆவது உப ஆவணத்தில் சித்தியடைய வேண்டும்.

IV. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணம், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள், அரசினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற வேறு சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இந்நியமனம் உட்பட்டது.

V. கடமையின் தேவைக்கேற்ப இரவு,பகல் போன்ற வேளைகளிலும் கடமையாற்ற வேண்டியதுடன் வழங்கப்படும் கடமைகளுக்கேற்ப விடுமுறை நாட்களிலும் விருப்புடன் தமது கடமைகளை வழங்கத் தயாராக இருக்கவேண்டும்.

04. **சம்பளத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 29,840.00-10×300-11×350-10×560-10×660- ரூபா 48,890.00 (MT1-2016) மாதாந்தம் சம்பளத்திட்டத்திற்கு உட்பட்டது.

05. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளித்திட்டம் கவனத்தில் கொள்ளப்படும். இந்த நேர்முகப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறுவதுடன் விண்ணப்பித்த மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டது.

| | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்சப் புள்ளி |
|---|---|---|
| 1 | கல்வித்தகைமை | 30 |
| 2 | தொழில்தகைமை | 30 |
| 3 | உரிய துறையில் அனுபவம் | 35 |
| 4 | நேர்முகப்பரீட்சையில் காட்டும் தேர்ச்சி | 05 |
| | மொத்தப்புள்ளி | 100 |

மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும். பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உச்சப்புள்ளிகளின் அளவு உள்ளடக்கப்பட்டதாக புள்ளி வழங்கப்படும். அந்தப் புள்ளிகளை வழங்குவதற்கான விபரமான புள்ளித்திட்டமொன்று பரீட்சை ஆணையாளரினால் கடைப்பிடிக்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் சித்தியடைவதற்காக குறைந்தபட்சம் 40% மான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் உரிய பதவிகளின் தன்மைக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பின்னர் வெற்றிடத்தின் எண்ணிக்கையின் மூன்று மடங்கினர் தேர்ச்சிகளை அளவிடும் தொழில் (செயன்முறை) சோதனைக்காக அனுப்பப்படுவர். தொழில் (செயன்முறை) சோதனையில் உயர்ந்த புள்ளிகளைப் பெறுபவர்களிடையே முன்னுரிமைக்கேற்ப காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

06. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 250.00 ஆகும். இந்தப் பணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத்தலைப்பு 20-03-02-13 இன் கீழே 2020.10.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக நாட்டின் எந்தப்பகுதியிலும் உள்ள அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலோ மட்டும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணபத்திலே உரியகூட்டினுள் கழறாதவாறு ஒட்டவேண்டும்.(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எதிர் கால பயன்பாட்டிற்காக வைத்துக் கொள்க) ஒவ்வொரு பதவிகளுக்காகவும் வெவ்வேறான கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

07. **விண்ணபத்தை அனுப்புதல்**.-

I. விண்ணப்பங்கள் யாவும் 2020.10.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியொன்று இந்த அறிவுறுத்தலின் இறுதியிலே காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து முதற்பக்கத்தில் 01 தொடக்கம் 06 வரையிலான பந்தியினையும் எஞ்சிய பந்திகளை மற்றய பக்கத்திலும் அமையுமாறு தயாரித்துக் கொள்ளவேண்டும். விண்ணப்பத்தின் தலைப்பிலே குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பதாரிகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பதாரிகள் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதவேண்டும்.

* உரிய மாதிரிக்கு அமையாதவையும் பூரணமற்றதான விண்ணப்பங்களும் எதுவித அறிவுறுத்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதனால் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சையின் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணபத்திற்கேற்ப அமைந்துள்ளதா என்பதையும் எல்லா தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பம் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் விபரங்கள் விண்ணபத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் பரிசீலித்து உறுதி செய்து கொள்ளவேண்டும்.

III. விண்ணப்பத்தை அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் ஓரத்திலே'முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் 2019 (2020)'எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

IV. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஒருவரும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை அரச பாடசாலையின் அதிபர் ஒருவர்,ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவர், கோட்டத்தின் கிராம அலுவலர் ஒருவர், சமாதானநீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர்,சட்டத்தரணி ஒருவர், பிரபல்ய நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம் மிக்க அலுவலர் ஒருவர், அரசாங்க மற்றும் மாகாண சேவையில் நிலையான பதவியிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர், பௌத்த விகாராதிபதி, மகாநாயக்கர்கள் மற்றும் ஏனைய மதத்தலைவர்கள் அல்லது மதத்தலைவராகக் கருதப்படும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

V. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கேற்ப அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தொலைந்துபோதல் அல்லது தாமதமாக அனுப்பப்பட்டமை என எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.

08. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல்.-**

I. வர்த்தகமானி அறிவுறுத்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற கருதுகோளுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கோள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னராக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

II. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் இந்தப்பதவிக்கான தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படமாட்டாது.

III. விண்ணப்பதாரிகளுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டவுடனே உடனடியாக அது தொடர்பாக செய்தித்தாளிலே விளம்பரம் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதுவிடின் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு (நிருவாகக் கிளை பரீட்சைத் திணைக்களம்) அறிவிக்க வேண்டும். அவ்வாறு விசாரணை செய்யும் விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விலாசம் என்பவற்றை சரியாகக் குறிப்பிடவேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவர் எனின் அந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அழைப்புக் கடிதத்தின் பிரதியை விரைவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தை அறிவித்தலில் காட்டப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்து கொள்ளுதல் மிகச்சிறந்தது. அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரணை செய்கின்ற எந்தத் தகவல்களையும் உறுதி செய்து கொள்வதற்காக தங்களிடம் உள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச் சீட்டின் பிரதி,பதிவுத் தபாலின் பற்றுச் சீட்டின் பிரதி என்பவற்றை தயாரக வைத்திருத்தல் வேண்டும்.

IV. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டவர்களாவர்கள். அந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் தண்டனைக்கு உட்படுத்த வேண்டி ஏற்படும்.

09. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்.-** விண்ணப்பதாரிகளினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களுள் ஒன்றை நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு முன்வைக்க வேண்டும்.

I. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
II. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் முகமாக முகம் மற்றும் தமது இரு காதுகளை மறைக்காது வருதல் வேண்டும். அவ்வாறு ஆள் அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உள்வாங்கப்படமாட்டர்கள். மேலும் நேர்முகப்பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அலுவலர்களுக்கு விண்ணப்பதாரிகளை இனங்கானக் கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளும் தெரியக் கூடியதாக இருக்கவேண்டும்.

*10.* **தவறான தகவல்களை வழங்குதல்.-**

I. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்திலே குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதாவது தகவல் ஒன்று பொய்யாகவோ அல்லது தவறுதலாகவோ ஆட்சேர்ப்பதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பதாரதன்மை இரத்துச் செய்யப்படும். அதனால் பொய்யான அல்லது தவறான தகவல் ஒன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அரச சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்பட்டு அரச சேவையில் இருந்து விலக்குவதற்கும் நேரிடும்.

*11.* வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுவது தொடர்பான இறுதித் தீர்மானம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

*12.* சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களில் மொழி தொடர்பாக ஏதாவது வித்தியாசம் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவுறுத்தலுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பீ. சனத் பூஜித,
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3ஆம் சேவை வகுதியின் தரம் **III** இன் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் *-2019 (2020)*

**Recruitment to Grade III Posts of Management Assistants' Technological Segment 3 Service Category –2019 (2020)**

(இலக்கம் அல்லது குறியீடுகளைப்பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களிலே தரப்பட்ட கூட்டினுள் தெளிவாகவும் சரியாகவும் இலக்கம் / குறியீட்டைக் குறிப்பிடுக.)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

| | |
|---|---|
| நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி | |

*சிங்களம்- 2 /தமிழ்- 3 /ஆங்கிலம்- 4*

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் பதவி | |

(விண்ணப்பிக்கும் பதவிக்கான இலக்கத்தை எழுதவும்)

| | பதவி | இலக்கம் |
|---|---|---|
| 1 | லிதோ ஓவ்செட் பதிப்பவர் மற்றும் இயந்திர இயக்குநர் | 1 |
| 2 | எழுத்து அச்சக இயந்திர இயக்குநர் | 2 |
| 3 | முன் அச்சிடல் திட்டமிடலாளர் | 3 |
| 4 | கணினி தட்டச்சு மற்றும் அச்சகக் கோலம்வரைபவர் | 4 |
| 5 | அச்சுவேலை முடிப்பவர் | 5 |
| 6 | அச்சக தொழினுட்பவியலாளர் | 6 |

1. 1.1 முழுப் பெயர்:...................................................................................
(ஆங்கிலத்தில்)
1.2 முதல் எழுத்து இறுதியில் வருமாறு முதல் எழுத்துக்களுடன் பெயர் :..........................
(ஆங்கிலத்தில்)...........................................................................................

1.3 முழுப் பெயர்:..........................................................................................

(தமிழில்)

2. 2.1 நிரந்தர முகவரி:........................................................................................

(ஆங்கிலத்தில்)

2.2 நிரந்தர முகவரி:........................................................................................

(தமிழில்)

2.3 அழைப்புக் கடிதம்அனுப்பப்படவேண்டிய முகவரி:............................................

(ஆங்கிலத்தில்)

3. ஆண்/பெண் தன்மை : ☐ ஆண்- 0 பெண்-1

4. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

6. 6.1 பிறந்த திகதி:

ஆண்டு : ☐☐☐☐ மாதம்:. ☐☐ திகதி : ☐☐

6.2 விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று வயது : (2020.10.26)

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா: ☐ விவாகமானவர்-1 விவாகமாகாதவர்-2

8. கல்வித்தகைமை

8.1 க.பொ.த (சாதாரண தர) பரீட்சை

பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மாதமும்:.............................................

பரீட்சை சுட்டெண்:..........................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9. தொழில் தகைமை :

| பாடநெறி | பயின்ற வருடம் | | NVQ மட்டம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

9.1 உங்களால் முன்வைக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் எந்த NVQ மட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதமொன்று கட்டமைக்கப்பட்ட நேர்முகக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

10. உரிய துறையில் பெற்றுள்ள அனுபவம்:.........................................................

11. வேறு கல்வி மற்றும் தொழில் தகைமை:.......................................................

12. நீங்கள் ஏதாவது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் தவறு இழைத்தவராக கருதப்பட்டுள்ளீரா? ஆம் எனின் அது தொடர்பாக குறிப்பிடுக:...............................................

13.பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரம் –

13.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்:.................................................
13.2 பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும்:..........................................................................
13.3 செலுத்திய பணம் : ரூ. ..............................................................................

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும் |
|---|

14. விண்ணப்பதாரியின் உறுதி மொழி

14.1 இந்த விண்ணப்பத்திலே என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் என கௌரவமாக உறுதி செய்கிறேன். இங்கு ஏதாவது பகுதியொன்று பூரணப்படுத்தப்படாமலோ அல்லது தவறுதலாக பூரணப்படுத்தப்பட்டிருப்பின் ஏற்படும் பாதிப்பை ஏற்றுக் கொள்ள நான் சம்மதிக்கின்றேன். மேலும் இங்கு எல்லாப் பகுதிகளும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறேன்.

14.2 என்னால் வழங்கப்பட்ட ஏதாவது தகவலொன்று தவறானது என உறுதி செய்யப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் எனவும் நியமனம் பெற்ற பின்னர் சேவையில் இருந்து நீக்கப்படுத்துவதற்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் என்பதை அறிவேன்.

14.3 மேலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

14.4 இங்கு குறிப்பிடப்படும் எந்தத் தகவலும் பின்னர் மாற்றப்பட முடியாது.

............................
விண்ணப்பதாரியின் கையெப்பம்

திகதி:...........................

15. விண்ணப்பதாரியின் கையெப்பத்தை உறுதிப்படுத்தல் :

மேலேயுள்ள விபரங்களை குறிப்பிட்ட திரு./திருமதி/செல்வி...................................... அவர்கள் எனக்குத் தெரிந்தவர் எனவும், இன்றைய தினம் எனதுமுன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் என உறுதிப்படுத்துகிறேன்.

.................................................
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி இலச்சினையும்)

பெயர்:.....................
பதவி:......................
முகவரி:..................
திகதி.....................

16. மேலேயுள்ள விபரங்களை குறிப்பிட்ட திரு./திருமதி/செல்வி...................................... என்பவர் இந்த நிறுவனத்தில் கடமையாற்றுகிறார் எனவும் அவர் வழங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும் இந்தப் பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் இந்நிறுவனத்திலிருந்து அவரை விடுவிக்க முடியும் எனவும் சிபாரிசு செய்கிறேன்.

.................................................
(திணைக்கள தலைவரின் கையொப்பமும் பதவி இலச்சினையும்)

பெயர்:.....................
பதவி:......................
முகவரி:..................
திகதி :.....................

09-821

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.